உ

பாரதசக்தி

போர்ப் பாமலர்

அருட்கவிஞர்
"அகிலாசூதன்"
காளிதாசன்



பாரதத்தை வாட்டும் பகைவர் பழியழிய
வீரசக்திச் செல்வர்களே! விழித்தெழுவீர்!

பாரதசக்திப் பிரசுரம்
காரைக்குடி—1

பாரதசக்திப் பிரசுரம்
வெளியீடு வரிசை எண்—1

முதற் பதிப்பு—மார்ச் 1966

விலை ஐம்பது காசு

அச்சிட்டோர்:
செந்தமிழ்ப் பதிப்பகம்
புதுக்கோட்டை.

சமர்ப்பணம்

—o—

பாம்புக்குங் கூடப் பால்வார்த்துப் பாராட்டும் நமது பாரதசக்தி, இன்று சீனப் பகைவனின் தீப் பார்வையுள் அகப்பட்டுத்திகைக்கின்ருள். கருணைக்கண் களிலே குருதி சொட்டக் கலங்கி நிற்கின்ருள்!

இந்நிலையில் தம் உடல் பொருள் ஆவி அனைத் தையும் அவள் திருவடிகளில் அர்ப்பணித்து; ஆர்ப் பரித்து நிற்கும் தியாக சீலர்களாம் — போர்வீரமணி களுக்கு உணர்ச்சியூட்டும் கடமையுணர்ச்சியுடன் **"பாரதசக்திப் போர்ப் பாமலர்"** என்னும் இந் நூலைச் சமர்ப்பிக்கின்ருேம்.

பாரதத்தின் 'அமைதி'ப் பணிக்காகத் தன் "ஆத்மஜோதி" யினையே சாந்தி உலகினில் சமர்ப்பித்த அருளாளர்—அமரவீரர் நமது பாரதப் பிரதமர் கனம் லால்பகதூர் சாஸ்திரியவர்களுக்கும் "ஆத்மாஞ்சலி" செலுத்துகின்ருேம்.

தேசபக்திக்கே ஆதி காரணர்களான ஆசிரியத் தெய்வங்களும் – மாணவ வீரமணிகளும், நாட்டு நலன்களில் நாட்டமுள்ள நல்லாரனைவரும் எம் தொண்டுக்கு ஆசியும் ஆதரவும் அருளுவர் என்றும் நம்பும்,

எம். கே. சுந்தரம்
"அகிலாசுதன்"
காளிதாசன்

காரைக்குடியில் தங்கம்!

"ஆம்! காரைக்குடியிலே தங்கம் இருப்பது உண்மையேதான்!"

"என்ன! தங்கமா? அங்குள்ள தங்கபஸ்பம் புகையிலை ஞாபகத்திலே தந்த வார்த்தையா? அந்தப் பகுதியிலே ஏதய்யா தங்கம்?"

"தங்கம்," என்றவுடனேயே "நமது பாரதத்தைக் காக்க அவசியம் அத்தங்கம் வேண்டுமய்யா! தங்கமான மக்களே! தாருங்கள் அதைத் தானமாக!" என்று அருளிய அமரவீரர் – சாந்தி நாயகர் பாரதப் பிரதமர் கனம் லால்பகதூர் சாஸ்திரி அவர்களின் இரக்கமான திருவாசகம் நம் இதயத்தையே ஈர்க்கிறது!

ஆனால் நாம் குறிப்பிடும் தங்கம் இருக்கிறதே— அந்தத் தங்கத்தைவிட மேலானது! பாரத மாதாவின் வெற்றித் திருச்சின்னமாக அணியக்கூடியது! அத் தங்கம் என்ன தெரியுமா?

பாரத இரதத்தை கீதா விலாசன் கண்ணனைப் போற் செலுத்தி அரசியலை நடத்தும் தலைவர்களுக்கு நல்வழிகாட்டும் கனம் காமராஜர்—

"பத்மஸ்ரீ" சிவாஜி கணேசன் போன்ற கலைஞர்கள், கவிஞர்கள், தேசீயத் தலைவர்கள் தொழிலதிபர்கள், வர்த்தக மேதைகள் மற்றும் மக்கள் பல்லோருடன் பழகி மகிழ்ந்து பாராட்டப் பெறும் மதிப்பு வாய்ந்த சொக்கத்தங்கமாகும்!



ஸ்ரீ. ஏ. கே. ஆர். அப்துல் மஜீது அவர்கள்

"நல்லாரை நாவிலுரை — பொன்னைக் கல்லில் உறை" என்பது புது மொழியல்ல - பழைய மொழி! ஆகவே தங்கம் போன்ற அந்த நல்லவரைத்தான் இங்கு நாம் "தங்கம்" என்று கூறவந்தோம்!

வளர்ந்து வரும் வள நகராம் காரைக்குடியில்

பிரபல ஜவுளி வர்த்தக மன்னராகிய

ஸ்ரீ A. K. R. அப்துல் மஜீது அவர்களே

அந்த தேசபக்திச் செல்வமான திருவளர் தங்கம்!

அந்தத் தங்கப் புதையல் எமக்குக் கிடைத்தது!

தேசபக்திக்குப் புத்துணர்ச்சியூட்டும் "பாரதசக்திப் போர்ப்பாமலர்" என்னும் எம் கவிதை மலர்களை மக்கள் கரமலர்களிலே அளித்து மகிழும் பேறும் கிடைத்தது!

வளர்கின்ற வள்ளலாரான அந்த இமயத் தங்கம் " A. K. R. " அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து பாரத வெற்றிக்குத் துணைபுரியுமாறு ஆண்டவன் திருவடிகளை வேண்டும்,

பாரதசக்திப் பிரசுரம் முத்துப்பட்டணம் காரைக்குடி-1.	அருட்கவிஞன் "அகிலாசுதன்" "காளிதாசன்"

—O—

வாழ்த்துரை

காரைக்குடி மு. வி. நகர்மன்ற உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்-தேசபக்திச்செல்வர் திரு வே. சொக்க லிங்கம், பி. ஏ. பி. டி., அவர்கள்.

இந்தியா சீனு போர் பற்றிய பேச்சு நாடெங்கிலும் முழங்கக் கேட்கின்ரும். நாம் நடத்தும் போர் தற் காப்புப் போராகும். இப்போர் நம்மீது சீனரால் திணிக்கப்பட்டதாகும். இதில் நாம் வேற்று நாடுகள் வியக்கும் வண்ணம் வெற்றி பெற்று வருகிரும்.

நமது அடக்கத்தைத் தவருக எண்ணியதுடன் நமது வலிமையினையும் ஏளனம் செய்த சீனனுக்கு, அவன் எதிர்பாராத வண்ணம் நல்ல உதை கிடைத்து வருகின்றது. இப்போரின் மூலம் நமது இராணுவத் தின் வலிமை வையகமறிய வாய்ப்பேற் பட்டுள்ளது! வீரர்களின் பெயர் நம்நாட்டு வரலாற்றில் என்றும் நிலைபெற்று நிற்கும்!

நமது இராணுவ தந்திரம், இராஜ தந்திரம், இராணுவ வீரம் ஆகியவை போரில் நமது வெற்றிக்கு முக்கிய காரணங்களாகும். இப்போரில் "நாடு ஒரு மனிதன்" என ஒன்று திரண்டு எழுந்து நிற்கின்றது! பல்வேறு வாழ்க்கைத் துறையில் உள்ள மக்கள் எல் லோரும் இதில் பங்கு கொண்டுள்ளார்கள். நாட்டு வர லாற்றில் சிறப்பிடம் பெற இருக்கும் இப்போரைப் பற்றிய பாடல்கள் பலவற்றை ஆசிரியர் திரு. "அகிலாசுதன்"

அவர்கள் இயற்றியுள்ளார். 'சுதன்' அவர்களுடைய பாக்கள் படிக்கச் சுவை பயப்பனவாய் அமைந்துள்ளன. இனிய, எளிய நடையில் கருத்துச் செறிவையும், வீர உணர்ச்சியையும் ஒருங்கே ஊட்டவல்லன. சொல்லழகும், பொருளுணர்ச்சியும் குன்ருமல் நின்று நிலவுகின்றன. ஆசிரியர் உள்ளத்தில் ஊறும் நாட்டுப்பற்றை, வீர உணர்ச்சியை எடுத்துக் காட்டும் ''வண்ண ஓவியங்களாம் எண்ண ஓவியங்கள்'' என இதைக் கூறினுல் மிகை யாகாது.

இப் பாடல்கள் படிப்போர்க்கு இன்பத்தையும், எழுச்சியையும் தேசபக்தியையும் ஊட்டுவதோடு சீன னின் அவல நிலேயினேயும், சிறுமதித் தன்மையினேயும், சூழ்ச்சிக் கொள்கைகளேயும் படம் பிடித்துக் காட்டு கின்றன. படித்துப் பயன்பெறுக; மாணவர் உலகமும் மக்கள் உலகமும்.

இங்ஙனம்,

வே. சொக்கலிங்கம் B. A; B. T.

தலைமை ஆசிரியர்

மு. வி. நகர்மன்ற உயர்நிலைப்பள்ளி,

காரைக்குடி-1

*

ஸ்ரீ. க. முத்தையாத் தேவர், பி.ஏ;பி.டி. அவர்கள்

தலைமை ஆசிரியர், சங்கர் ரெட்டியார் கழக உயர்நிலைப்பள்ளி,
நாங்குநேரி. (திருநெல்வேலி மாவட்டம்)

பார்புகழும் பாரதியார் வழிநின்று நம் கவிஞரியற்றிய பாடல்கள் சிறந்த தேசபக்தி மலர்களாக மலர்ந்துள்ளன!

"சீனத்தராய் விடுவாரோ?" என்று அன்றே சீனனை மட்டும் குறித்தார் பாரதி. தெய்வீகக் கவியாகிய அவருக்கு அன்றே சீனனின் தீக்குணம் தெரிந்ததில் வியப்பில்லைதான்!

இன்று நம் கவிஞர் சீனனின் கொடுமை கண்டு குமுறுகின்றார்! அவரின் சிறந்த பாடல்களில் அமைந்துள்ள உவமைகள் அவற்றை நமக்கு விளக்குகின்றன. குணத்தில் ஓந்தியென்றும், கருகும் காளானென்றும், ஓடும் ஆட்டு மந்தையென்றும் சீனனைப் பலவாறு குறிக்கின்றார்.

மேலும் நம்மவரின் நாட்டுப் பற்றும், வீரமும், தலைவர்களின் சீரிய பண்புகளும் பாடல்களில் விளக்கப்பட்டுள்ளன.

"யாருக்கு வெற்றி?" என்ற வினாவை எழுப்பி "வந்தாரையெல்லாம் வாழவைக்கும் பாரதத்திற்கே" என்றார் உண்மைக் கவிஞர், ஆம், நாமும் அதே வினாவை

எழுப்பித் தம் கவிகளின் மூலம் நாட்டுப்பற்றை எழுப்ப எண்ணிய '' கவிஞருக்கு வெற்றியே " என்பதைக் காண்கின்றோம்.

நாங்குநேரி
திருநெல்வேலி மாவட்டம் } கு. முத்தையா

சாஸ்திரி நீ! சார்ந்தனையோ! சாந்திலோகம்!

ஸ்ரீ. கே. இ. பெருமாள்
ஆசிரியர்: திருநாவுக்கரசு வித்தியாசாலை,
நேமத்தான்பட்டி.

☆

அமைதிக்கோர் இலக்கியமாய்;
ஆண்மைக்கோர் இராமனுமாய்;
அறிவில் பின்னோர்,

தமைநோக்குந் தலைவனுமாய்;
தண்ணருளில் தாயுருவாய்;
தரணி வாழ்த்தும்,

அமைச்சுக்கோர் அணிகலமாய்;
ஆங்காரப் போரடக்க;
ஆண்டவன் தாம்,

சமைத்திட்ட லால்பகதூர்
சாஸ்திரி நீ! சார்ந்தனையோ?
சாந்திலோகம்!

❋

அருட்கவிஞர் ''அகிலாசுதன்''
பாரதசக்திப் பேரர்ப்பா மலருக்கு அமரகவியின் ஆசி



''நின்பாட் டாலே நீள்பகை நீங்கவே!
என்பாட் டீந்தேன்! ஏற்றிடு ராஜா!''

—சுவாமி சோமசுந்தரன்
வள்ளல் பாரி நகர், (கொட்டாம்பட்டி)

உ

ஜெய! ஜெய! புவனேச்வரி!

அருட்கவிஞன்—"அகிலாசுதன்"

இராகம்-பைரவி　　　　　　　　　　தாளம்-ஆதி

பல்லவி

ஜெய! ஜெய! புவனேச்வரி! - ஓங்காரமாய்
ஜெனித்த சுந்தரி! பைரவி! ஜெயபாரதி!

—ஜெய ஜெய ...

அநுபல்லவி

கயமுக னும் சுதனைக் கடந்த பாரதமாம் போர்க்
காவியம் கணிக்க வைத்த கமலமனோகரி!

—ஜெய ஜெய....

சரணம்

மாந்தருள் மாணிக்கமாம் நேருசெல்வி இந்திரா!
மாதர்குல மாமணியாம்! மாட்சிமைசேர் இந்தியா!
சாந்திபெற் றிடவே!நின் சந்நிதிபோல் ஓங்கிடவே!
சாந்தாநந் தர்தவத்தின் சாம்பவியே! ஜோதியே!

—ஜெய ஜெய...

புவனேச்வரிநகர் (புதுக்கோட்டையில்) அருட்கொலுபுரிந்து அகிலத்தின் அமைதிக்காக ஜோதி சாந்தா நந்தாவின் தவத்திருத் தாயாகக் காட்சி தருகின்றாள் ஸ்ரீ புவனேச்வரிமாதா!

வேண்டும் பொருள்?

"அகிலாசுதன்"

✵

அகிலமெலாம் அன்புவெள்ளம்
பெருக வேண்டும்!
ஆருயிரைப் போற்றுமுளம்
அருள வேண்டும்!
'பகைமை' யிருள் கல்லாமை
பழிக்க வேண்டும்!
பல்கலை நூல் நிலையமெங்கும்
பரவ வேண்டும்!
மகிமைமிகும் 'நல்வழி' பின்
பற்ற வேண்டும்!
மாசறுவின் மதியமென
மதியும் வேண்டும்!
சகலகலா வல்லி சரண்
சார வேண்டும்!
சாந்தானந்தா! எங்கள்
சாமி! ஸ்வாமி!

✵

வாழ்வதற்கே நாம் பிறந்தோம்!

(மலைக் குழந்தைவேலன்)

உயிர்வாழும் வீடாம் நம் உடல்தாம் நல்ல,
உறுதியோ டிருக்கவுண் மட்டுமல்ல,
பயிலவே வேண்டும்யோ காச னத்தைப்
பற்றிடுவார் பாரதத்தின் பலமே பெற்றார்!

கூனிக் குறுகிநிற்கும் முதுகைக் கொண்டே,
குற்றுயிராய்க் குலைந்து நடமாடும் மக்காள்!
மானினைப்போல் பொன்மேனிப் பொலிவும்; சிங்கம்,
மதகரியாம் தன்மை "மனப் பான்மை" யாமே!

"வாழ்வதற்கே நாம் பிறந்தோம்!" என்ற எண்ணம்
வளர்ந்தோங்க உடற்பயிற்சிக் கலைவளர்ப்பீர்!
தாழ்வகற்றும்! உணர்ச்சியூற் றெடுக்கத் தூண்டும்!
தகுதிதரும் "கடயோகம்" தனைப் படிப்பீர்!

உள்ளம் உடல் இவையிரண்டும் உரம் பெற்றார் தம்
உயிர் வாழ்வு ஒரு நூறே டிருநூ றுதும்!
கள்ளமில்லாக் கருணை முகக் காந்தி மின்னும்!
கலங்காரே! மலைதம்மேல் கவிழ்ந்தாலும் தாம்!

பாரதப்போர் வீமன் கட்டப் பொம்மன் போலே
பகைவர் முனம் மார்தட்டும் பழந்தமிழ்ப் போர்,
வீரரைப்போல்; நிமிர்நடைதாம் விளங்க வாரீர்!
விரைந்தின்றே! சினத்தான் வெகுண்டு ஓட!

அஞ்சும் இதயம் வாக்கு உடல் நோக்கெல்லாம்,
அஞ்சாமை ஆண்மை நம்மை ஆளவேண்டும்!
பஞ்சு மனத் தைக் கயிறுய் முறுக்கி வாழ்க்கைப்
பம்பரத்தை ஆட்டி "இன்பப்பறவை" யாவோம்!

"கட்டழகன் இவன்!" எனவே, கண்டார் யாரும்,
களித்துரைக்க இமயத்தைக் கட்டி யாள்வோம்!
திட்டழகன்; சினத்துத் தில்லுமுல்லன்,
திணறிடவே! தோள்வலியைப் பெருக்கி வெல்வோம்!



திறமிக்கார் தோள் வெல்க!

அன்பு நம்பால் பொங்க!
அறிவு நம்பால் பொங்க!
அறம் பொருள் இன்பம் முப்பால்
அகிலம் யாவும் பொங்க!

பொன்படைத்த நாடென்னும்
புகழ்படைத்த பாரதமாம்,
காந்தி தவத்திரு நாட்டின்
கழனியெலாம் விளைவோங்க!

ஊனுடை யெல்லாம் தங்கள்
ஊக்கத்தால் ஆக்கி யெட்டுத்
திக்கெல்லாம் வழங்கிவரும்,
திறமிக்கார் தோள்வெல்க!

நம்நாட்டுக் கப்பல்கள்தாம்
நாகரிகம் பேணுபல
நாட்டுக்கும் வேண்டுபொருள்,
நல்கும் வாணிகம் மல்க!

இமயத்தைப் போலசையா
இதயத்தைக் கொண்டுழைப்பால்,
வானுலகின் போகமெலாம்
வையம் பெற்றே வாழ்க!

சீனத்தின் சிறுமையினைச்
சிரித்தே சுட்டிட நேரு,
'மோனத்தீ'ச் சுடர் பாரின்
முற்றும் ஒளி மூட்டுதுபார்!

இந்தியாவின் முதல் பெண் மந்திரியாகும் பேறு பெற்ற

கனம். இந்திரா காந்தி அவர்களுக்கு

பாரத சக்தியின் வாழ்த்து

※

பல்லவி

இமயத்தாய் வாழ்த்துரைத்தாள்!- இந்திரா காந்தி
இந்தியத் துரைத்தனஞ் செய் மந்திரியான களிப்பால்!
—இமயத்தாய்

அநுபல்லவி

சமயத்தில் காக்கும்நம் கண்ணான் காமராஜ் காட்டும்
சர்வஜன வாக்கெனும் கீதை அரசியல் நடத்த!
—இமயத்தாய்

சரணம்

நேருஜி லால்பகதூர் சாஸ்திரி தம் பொறுமை;
நேர்மை; கடமை; திறமை; அறிவாண்மை; எளிமை;
பாருளோர் போற்றும் வாய்மை; பண்புடைமை;வளமை
பாரதத்தின் வலிமை வளரப்பெண் ணின்பெருமை!
— இமயத்தாய்

இயற்றியவர்: ''இந்திரா'' சுந்தரம்



வெற்றி காண்போம்!

(வந்தேமாதரம் என்ற பாட்டிசை)

பல்லவி

அன்றேசொன் ஞர்பாரதியார்! — அது
இன்றே பலித்தது அறியாதவர் யார்?
(அன்றே)

சரணங்கள்

"ஈனப்பறையர்க ளேனும் — அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்ருே?
சீனத்த ராய்விடு வாரோ?" — என்றே
செப்பியதைச் செயலில் நன்கு கண்டோம்!
(அன்றே)

ஆயிரம் உண்டிங்கு ஜாதி — எனில்,
அன்னியர் வந்து புகவென்ன நீதி? — ஓர்
தாயின் வயிற்றில் பிறந்தோர் — தம்முள்
சண்டை செய்தாலும் பின் சாருவரன்ருே?
(அன்றே)

ஒன்றுபட் டேவெற்றி காண்போம்! — பாரில்
ஓங்கும் இமயங் கொண்ட பார தத்தை!
வென்றிடலாம் என்று வந்த — சீன
வீணனைச் "சூச்சூச்சீ"ப் போவெனப் பாய்வோம்!
(அன்றே)

கட்சிச் சண்டைபல போட்டே — நாம்
காண்பவர்க்கு வேறு காட்சியா னாலும்,
பட்சமுள்ள அண்ணா தம்பி — என்னும்
பண்பினைப் பாவிச்சீ னர்க்குரைப் போமே!


(அன்றே)

நேருக்கு யார் பகையுண்டு? — ஆனால்,
நேர்மை கெட்ட 'ச்சூ' புகை மூட்டி விட்டான்!
பாருக்குள் நல்ல நாடெல்லாம் — நம்
பக்கமுண்டே 'ஜய பாரதம்' பார்! பார்!

(அன்றே

சத்தியப் போர் முறை வீரர் — நிறை
சந்ததி யார் இந்தியர் என் றறியான்!
புத்தி கெட்ட சீனன் போக்கை — இனிப்
பூண்டோடு அழிக்க வேண்டும் மாசக்தி!

(அன்றே)



யாருக்கு வெற்றியாம்?



யாருக்கு வெற்றியாம் போருக்கு நிற்போரே!
நேரு காந்திக்கா?-சீனத் தாருக்கா? —யாருக்கு வெற்றி
நேருக்கு நேராக நேசித்து வாழ் தேசத் தாருக்கா?
ஏறுக்குமாறாகக் கூடிக் கெடுக்கும் கொலைஞர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

கைகொடுத் தேநய வஞ்சகம் செய்யும் கயவர்க்கா?
வைகை பிறந்திட்ட மண்ணைக் கொண்ட பாண்டி
[மன்னர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

மன்னுயிர்க் காய்ச் சேயைத் தேரிட்டுக்கொல் சோழ
[மண்ணுக்கா?
என்ன கொடுப்பாய் நீ; இல்லையென்றால் கொலை
[என்பர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

முன்னம் இமயத்தில் திறக்கொடி நாட்டிய சேரர்க்கா?
பகை மூட்டி அமைதியை யோட்டிய செஞ்சீன ஈனர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

இமயத்தைக் 'கயிலே' என்று பணியும் கரத்திற்கா?
இதயத்தை 'இரும்பாய்' மாற்றிக் குருதியுண்
[அரக்கர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

"சை" யெனின் நாமே இழிந்த தெனச் சாற்றும்
[''சைநா" வுக்கா?
"வை" யென யாசித்தால் வாரித்தந்த பாரி
[மண்ணுக்கா?
— யாருக்கு வெற்றியாம்

கூடிக்கெடுக்கப் பசுத்தோலேக் கொள்கொடும்
[பாவிக்கா?
நாடிவரும் எவரும் நம்மவர் என்ற நேருக்கா?
— யாருக்கு வெற்றியாம்

பஞ்சசீலம் பேசிப் பஞ்சாய்ப் பறக்க விட்டானுக்கா?
வஞ்சமில்லாக் காந்தி வாரிசு லால்பகதூருக்கா?
— யாருக்கு வெற்றியாம்

இமயத்தி பேத்தினே யுண்டு ஏப்பமிட்ட மறத்துக்கா?
இந்தியத் தாயின் மகளான இந்திரா காந்திக்கா?
— யாருக்கு வெற்றியாம்

பாம்புக்குங் கூடப் பால் வார்த்திடும் பாரதநேயர்க்கா?
சோம்பும் 'அபினி'யைத் தின்னும் சூ தானதீவாயர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

அசோகரின் தரும சக்கரம் மின்னும் கொடியினுக்கா?
ஆபத்தைக் காட்டும் குருதி குறிக்கும் கொடியனுக்கா?
— யாருக்கு வெற்றியாம்

'தர்மம் தலேகாக்கும்' என்னும் குமணன் மொழியர்க்கா?
தம்மனச் சாட்சி எரிமலே கொள் அழி வழியர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

அமைதிக்காய் தன்னுவிதந்திட்ட லால்பகதூருக்கா?
இமைப் பொழுதும் நலம் எண்ணுத சீன வெறியர்க்கா?
— யாருக்கு வெற்றியாம்

நவபாரதத்தின் வள்ளல் சீதக்காதி!

"*ஏக்கேஆர்*" போன்ற வள்ளலார் இலங்குவ
தால் உலகின்
போக்கிலே "*அமைதி*" *பொங்குமே! பாரில்*
போரிலேயே!
ஆக்கமாய் பாரதம் அனைத்துங் கொண்டாடும் நற்
பொங்கல் விழா!
வாக்கருள் நல்கினன்; ஆண்டவன்! அகிலா சுதன்
வரைந்தேன்!

❋

அன்று சீதக்காதி அருள் வள்ளல் வரலாறு
அறிந்த துண்டு!
இன்றும் அவ்வள்ளல் எழிலோங்க! ஒரு வள்ளல்
இருத்தல் கண்டு!
வென்று விடலாம்! நம் பாரதப் பகையினை வியக்கும்
"*அல்லா*"
என்று எம் கண்களில் "*ஏ. கே. ஆர்.*" திருமுகம்
இலங்கின்றதே!

அருட்கவிஞன்
— "அகிலா சுதன்"



தங்கத்துக்குத் தங்கம்!

—o—

எங்கள் இமயத்திருநாடு காக்கவே
தங்கத்துக்குத் தங்கம்! – சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

சங்கத் தொனியே முழங்கிடச் சீனச்
சைத்தானைச் சுக்குநூ றுக்கிடவே!
பொங்கும் கடலினைப் போல்வரும் பாரதப்
போர்மணிகள் வீறு கொண்டிடவே!

தங்கத்துக்குத் தங்கம் — சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

குமரி முனைத்தேவி கொண்டவேற் கண்கள்
கோபக் கனல்மூண்ட கோலத்தைப் பார்!
சமரிலே சீனத்துச் சண்டாளன் பொசுங்கச்
சண்டமாருதமாய்ச் சாடுருள் பார்!

தங்கத்துக்குத் தங்கம்! — சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

குழந்தைக் குணங்கொண்ட பாரத வீரத்தைக்
குத்தி ருசிபார்த்தே சீனத் தெத்தன்!
விழுங்க வழிபார்க்கும் பாழ்விழியைக் கொத்தி
வீழ்த்த நவசக்தி வேங்கையானுள்!

தங்கத்துக்குத் தங்கம்! — சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

கண்ணுக்குக் கண்ணுகக் காக்கும் சுதந்திரக்
காமதே நுவைக் கொள் கள்வன் அவன்!
எண்ணத்தைப் பிளந்து இமயப் பலியிட!
எண்ணிவிட்டாள் எம் இதய சக்தி!

தங்கத்துக்குத் தங்கம்! — சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

காந்திய தர்மத்தைக் காக்கும் எல்லை வீரர்!
கத்தி பலத்துடன் யுத்தி கொள் தீரர்!
ஓந்தி குணத்தனும் சைத்தானை ஒய்த்திட
உலக மகாசக்தி உருவே கொண்டார்!

தங்கத்துக்குத் தங்கம்! — சாஸ்திரி சொல்
தங்கத்துக்குத் தங்கம்!

(எங்கள்)





என்ன துணிவடா! சீனனுக்கு?

★

என்ன துணிவடா! சீனனுக்கு? — இந்த
இந்திய மண்ணினைக் கவ்வுதற்கு!

(என்ன)

கன்னலாய்ப் பேசிப் பஞ்ச சீலம் காட்டிக்
'காக்கை வடை, யெனக் கொத்துதற்கு!

(என்ன)

நேரு சாஸ்திரி போல் நேர்மையுண்டோ? — அவர்
நெஞ்சினுள் வஞ்சப் நினைத்த துண்டோ?
பாருக்குள் மதிக்கும் பாரத தேசத்தைப்
பகைத்தாயேடா! படு பாவியே நீ!

(என்ன)

திபேத்தை முன்னேயுண்டு ஏப்பமிட்டாய்! — அந்தத்
தில்லு முல்லை இங்கும் காட்டி விட்டாய்!
சகத்தைச் சிகப்பாக்கத் திட்டமிட்டாய்! — உன்
சம்பம் பலிக்காது கெட்டு விட்டாய்!

(என்ன)

'போர்! போர்!' எனவே முழக்கிடுவோம்! — அந்தப்
போராலே யுன்னை மடக்கிடுவோம்!
யார் யார் எதிர் நின்று எதிர்த்திட்ட போதிலும்,
பார்! பார்! "ஜெய்ஹிந்த்" தெனப் பாடிடுவோம்!

(என்ன)

சுற்றுள்ள நாடெல்லாம் எம்பக்கமே — சீனச்
சூதனே! உன் சூழ்ச்சி பாழாகுமே!
சற்றுங் கண்ணயரோம்! சமுத்திரமாவோமே!
சர்வ ஜன சக்தி கூட்டுவமே!

(என்ன)

சாஸ்திரி டாஷ்கண்டின் சந்திப்பிலே அயூப்
சலாத்துடன் அல்லா அருள் கலந்தார்!
மேஸ்திரி வேலைபாக் கில்லையடா! மீண்டும்
மீசை முறுக்கினுல் மீளாயடா! (என்ன)

இந்திரா காந்தியெம் புதியசக்தி! — முன்னே
இன்றே பணிந்தெம் இடம் விடடா!
சந்தி சிரிக்கும் சரித்திரத்தைச் — சீனச்
சந்ததிக் கீயாமல் "ச்சூ!" நடடா! (என்ன)

தூக்கம் எமக்கு வருமா?

தூக்கம் எமக்கு வருமா? எழுகடல்
தூங்கினும் ஓங்குமா பாரதம் மீட்டாமல்
(தூக்கம்)

ஆக்கங்கண்டு கொதித்தே அழிவினில் விழிவைத்தே
அமைதிகொள் பாரதத்தை அடுத்துக் கெடுத்தான்
[நின்றல்
(தூக்கம்)

வீரன் சிவாஜியுடன் வெற்றி முரசம் கொட்டிய
தீரன் கட்டப் பொம்மன் நாட்டில் தீ யிட்டோனை
[ஓட்டாமல்
(தூக்கம்)

புறமுதுகினைக் காட்டாப் போர்மணிகள் காட்டும்
"திறமதைப் பாரடா நீ! சீனச் சூவே!" யெனுமல்
(தூக்கம்)

சீனிப்பட்டாசு விற்ற சின்னப்பயலே உன்றன்
ஆனைப்பலத்தை எங்கள் அறங்கொல்லும் விதம்
[சொல்லாமல்
(தூக்கம்)

அபினியைத் தின்று தின்று அறிவழிந்திட்ட சீனச்
சகுனிக்குப் பாரதப்போர் சரிபாடம் கற்பிக்காமல்
(தூக்கம்)

பழகிய எம் நேருக்கே பகைவனுய் மாறிவிட்ட
புழுகனே! மண்டைக்கனம் போங்காலம் வந்ததடா!
(தூக்கம்

தோளோடு தோள்கொடுக்கும் துணைவரெமக்
[குண்டடா!

காளானே! உன் கர்வம் கருகும்நாள் காண்பாயடா!
(தூக்கம்)

கூடிக் கெடுக்க வந்த கொடும்பாவியுன் மண்டையைச்
சாடியுடைக்கு மெங்கள் சக்தியைத் தான்பாரடா!
(தூக்கம்)

சித்தத்தைக் கல்லாக்கிய சீனக் கொலைகாரனே!
மொத்தத்தில் மொத்துண்டு முடிவில் தொலைவாயடா)
(தூக்கம்)

பக்கத்துணைவர்களாய் ரஷியரும் வந்தாரடா!
மக்குப்பயலே! மந்தை ஆடுபோல் ஓடிடா!
(தூக்கம்)

புத்த திபேத்தியர்க்குப் பொல்லாங்கிழைத்த காலா!
எத்திக்குமே யுனக்கு இல்லையென விரட்டாமல்,
(தூககம்)

இமயத்தின் தூய்மையை இழித்திட்ட ஈனச் சீனு!
எமைப்புழு வெனமதித்தாய்! எம்திறம் இனிப்பாரடா!
(தூக்கம்)



யாருக்கு வெற்றியென்றால்...!

(" சுட்டும் விழிச்சுடரோ " என்ற இசை)

அஞ்சலி செய்திடுவோம்! — சீனத்தெத்தன்
ஆண்மை அழிந்திடவே!
வெஞ்சமர் செய்துவரும் — பாரதப்போர்
வீரமணி களுக்கே!

(அஞ்சலி)

பஞ்சம் வறுமை யெனும் — பாதகமே
பஞ்சையரை வாட்டவே!
நெஞ்சம் குமுறுகின்ற — மக்களே
நேர்மையுடன் கூடுவோம்,

(அஞ்சலி)

பெற்ற சுதந்திரத்தைப் — பேணிடாமல்
பேதம் செய்யும் மனத்தை,
முற்றும் நாம் விட்டொழித்தே — நம்மில் மூழும்
மூர்க்கத்தனம் அழித்தே,

(அஞ்சலி)

வாழ வழி வகுப்போம்! — அமைதியாய்
வையத்திலே; பகைமை
மூளவே பார்த்திடாமல் — தமிழ் வீர
மூர்த்திகளே! எழுவீர்!

(அஞ்சலி)

தீயினைப் போல் பரவும் — பல கட்சித்
தீதினை யே யழிப்போம்!
தாயினைப் பாயவரும் — சீனச்சூவைத்
தரையிருந்தே கெலிப்போம்!

(அஞ்சலி)

கங்கை முடிதரித்த — சிவனின் முக்
கண்ணென வே விழிப்போம்!
கொங்கை இமயத்திலே — கையை வைத்த
கொசுவினை நசுக்கிடுவோம்!

(அஞ்சலி)

நேரு சாஸ்திரியை எண்ணி — நம்மிருதோள்
பாருக்குள் முந்த வேண்டும்!
யாருக்கு வெற்றி யென்றால், — பாரதத்தா
யாருக்கே சொல்லவேண்டும்!

(அஞ்சலி)

கமலம்மை நேருபெற்ற — பாரதத்தின்
கண்ணும் இந்திரா காந்தி
நமது நவசக்தியாய் — நாளும் வாழ
நங்கடமை புரிவோம்! (அஞ்சலி)

சீனத்துச் சரவெடியே!

சீனத்துச் சரவெடியே!
உனைப் பார்த்துச் சிரிக்கின்றாள்:
மோனத்து இமயத்தாய்!
மடிசுரக்கும் அமுதத்தை;
ஈனத் தனமுடையாய்!
எடுத்துண்ண எழுகின்றாய்!
மானத்தைக் காப்போம் அம்
மணிவயிற்று மக்கள்யாம்!

*

கொண்டோம் உறுதியெனுங்
கோடரி கொண் டுனைச்சாய்க்க;
எண்டோளாய்! எண்டிசையோர்!
எம்பக்க முளநீதி!
கண்டோமென் றேயுன்றன்
கபடுகண்டே குமுறுகின்றார்!
திண்டோளா! உன் துடுக்கைத்
தீய்ப்போம்! தீ யா! போப்போ!

*

அணுக்குண்டை வெடித்திட்டாய்
எனக் கண்டே அஞ்சோம்யாம்!
துணுக்குற்று இருக்கின்றாள்;
துட்டா! எம் நவசக்தி!
துணைக்கொண்ட நேருகரம்
துணித்திட்ட துரோகியடா!
கணைக்காலை இனிமுறிப்போம்;
கடடா! போர்க் கொலைவிடடா!

இமயமலைப் பச்சையிலே...!

(''பொதிகைமலை உச்சியிலே'' என்ற ''திருவிளையாடல்'' படப் பாடல் தழுவியது)

இமயமலைப் பச்சையிலே
இருக்கும் எம் சக்தி — எழில்
இனிமை பொங்கும் செங் குங்குமத்
திலகமே நெற்றி
அமரும் வீரர் சமர் புரிந்தால்
அடைவரே வெற்றி! — அணு
அளவும் ஐயம் இல்லை அம்மா!
ஆம் ஜய சக்தி! (இமயமலை)

❊

அங்கயற்கண் அம்மையாண்ட
அருள் மகா சக்தி! — சீனன்
ஆணவத்தை அறவே அழிக்க
அகிலம் வாழ்த்துதே!
எங்கள்பார தத்தின் வலியை
எலியாம் சீனத் தான்! — அறிந்து
ஏதும் பாரா மல் வலிய
ஏச்சுக் காட்டட்டான்! (இமயமலை)

—○—



ஓஹோ! வீரர்களே!

"ஓடும் மேகங்களே" என்ற "ஆயிரத்தில் ஒருவன்"
படப் பாடலைத் தழுவியது.

✻

ஓஹோ! வீரர்களே!
ஓம் சக்தி பாலர்களே!
ஆஹா! சபாஷ் எனவே
ஆண்மையடைந்தீரோ!

நாடாண்ட லால்பகதூர்
நாற்றிசை நவிலும் தலைவன்!

நா வடங்காப் பொல்லாரை
நாணவைக்கும் போர்க் கலைஞன்!
கோடான கோடி சாதிக்
கொள்கையில் அகிம்சையின் சோதி!
வாடாதே புவிநீதி — இன்னும்
வாழவைக்கும் அசோகன் அமரன்
வாழக்காஷ் மீரம் காப்பீர்!

(ஓஹோ வீரர்களே)

ஊரெல்லாம் தூங்கையிலே
ஒளிந்தே குண்டுகள் பொழிவான்!
உலகமெல்லாம் சிரித்திடவே
ஒப்பாரி வைத்தே அழுவான்!
சீரெல்லாம் அழிக்குஞ் "சூ"
சிறுமதி அழிப்பதும் பாரம்!
பாரெல்லாம் நேசிக்கும்
பாரத மாம்அருள் நெஞ்சை
பழிப்பகை யழிப்பதும் கடமை!

(ஓஹோ வீரர்களே)



அமரவீரன் அப்துல் ஹமீது!

ஏ. வி. எம். **"குழந்தையும் தெய்வமும்"** என்னும் திரைப் பாடலான **"கோழி ஒரு கூட்டிலே"** என்ற இசை தழுவியது

*

பாரதமாம் ஏட்டிலே
பதிந்த பல பாட்டிலே
வீரர் புகழ் ஓங்குதுபார்!
வியந்தார் மேலை நாட்டிலே!

அமரவீரன்! அப்துல் ஹமீது
அடிவணங்கும் நாடிது!
ஆணவமாம் போர் மறுத்து
அறத்தினையே நாடுது!
புளுகத் தெரியுமா?
புத்தி தெளியுமா?
போகப் போக புரிந்துவிடும்
பொய்யா சீனச் 'சூ'வன்னு!

(பாரதமாம்)

அடுத்தடுத்த நாடு எல்லாம்
அளித்துவரும் வாழ்த்திலே!
அதிர்ஷ்டவச மாகத்தானே
அடித்த கோயில் மணியிலே!
அல்லா அருளாலே!
அதர்மச் சண்டையிலே!
அடித்த கீலர் திறத்தினாலே!
அடைந்த வெற்றி நினைவிலே!
அமைதி பார்! ஏர் முனையிலே!

(பாரதமாம்)



ஆண்டவன் சோலையப்பன் அருளால்
அமைதி பெறுவோம் பாரதத்தில்!
அவன் திருவடி தொழுவோம்!



கோலமிடும் பூங்குழலி!

—o—

கோலமிடும் பூங்குழலி! குலுங்கும்வளைக் கையழகி!
குவளைப் பூவின்
கோலமிகும் கண்ணழகி! குறுநகைதாம் அரும்புமுல்லை
கோர்த்த கற்பின்
சீலமிகும் வாயழகி! செந்தமிழின் இசையழகி!
சித்திரிப் பாய்!
ஞாலமிதில் மூளுபகை யாமிருளைப் போக்குகதிர்;
ஞாயிறன்ன :

(1)

வீரமிகு வேலினையும்; வெற்றிமுகங் கண்ட அந்த
வில்விஜயன்
தீரமிகு தோளினையும்; திருமலிந்த பாரதத்தின்
திசையை முட்டிக்
கோரமிகு வினைபுரியும் கோட்டானும் சீனன் 'சூ'க்
கொட்டம் வீழச்

சூரனையன் றழித்திட்ட சுப்ரமண்யன் கோலத்தைச்
சொலிக்கத் தீட்டாய்!

(2)

போர்க்கோலம் பூண்டிருக்கும் புகழ்வீர பத்திரர்க்குப்
புதுமை காட்டி!
ஈர்க்கின்ற இக்காலப் போராட்டக் கலன்களுடன்
இனிமை கூட்டி;
ஆர்க்கின்ற இசைக்கோலம்!கலைக்கோலம்!கவிக்கோலம்
அமைதி தீட்டிப்
பார்க்கின்ற இமயத்தின் பனிக்கோலம் பூமீதே
படைப்பாய் பாவாய்!



மண்ணகமே நம் தாய்! விண்ணகமே நம் தந்தை!

*

மண்ணகத்தாயின் மக்களே! நமக்கு
மத மெதற்கு?
மண்ணகத்தாயின் மக்களே! நம்மில்பல்
இனம் எதற்கு?
மண்ணகத்தாயின் மக்களே! நம்மில்பல்
மொழி எதற்கு?
மண்ணகத்தாயின் மக்களே! நம்மில்பல்
பிரிவெதற்கு?.......

மண்ணகத்தாயின் மக்களே! நாம்பல
மதமெனினும்;
மண்ணகத்தாயின் மக்களே! நாம்பல
இனம் எனினும்;
மண்ணகத்தாயின் மக்களே! பகர்மொழி
பலவெனினும்;
மண்ணகத்தாயின் மக்களே! நாம்பல
பிரிவெனினும்......

தாய் யார்?

மண்ணவளே நம் தாய்! மலையருவி பொழிநீரே
மக்கள் பருக மடிசுரக்கும் அமுதம்!

எண்ணற்கரிய நீள்கடலே அவளின் பரந்த
எழிற்கரங்களாக இலங்கும்!—

தந்தை யார்?

விண்ணகமே தந்தை! விரிகதிர்மதியவனின்
இருகருணை பொழிவிழியாம்! விஞ்ஞானக்
கண்ணருக்கும்; கலைஞருக்கும் கவின் விருந்தளிக்கும்
கலைக்கூடம்! முடிமின்னும் கோடி கோடி
நட்சத்திரக்கூட்டம்!—

காதல்!

மண்ணகத்தாய்; விண்ணகத்து நாயகனை
முகிலாம் உருவாய் அணைக்கின்றாள்!
எண்ணத்தின் எழுச்சியை; பன்மலர் வாயூறுந்தேனினை
எடுத்தூட்டுகின்றாள் கருவண்டாய்! வண்ணத்
தேனீக்களாய்!
உண்ணற்கினிய மண்ணவளின் மதுவுண்ட மயக்கம்
உம்பர்கோனைத் தழுவ! இரவென்னும் திரை
நடக்கும் அற்புதத்தை
பண்ணமைத்தே இம்மண்விண் பாட்டாகப் பாடவே;
பாவலனுக் கெத்தனையோ ஆவல்மிகுதப்பா!—

சினம் மூண்டால்......?

மண்ணகத்தாய்க்குச் சினமூண்டால்;
மடிமலை எரிமலை யாய்க் குமுறிடுவாள்!
மண்ணகத்தாய்க்குச் சினமூண்டால்;
மதியிழப்பாள்; கடற்கரங்கொட்டி ஆர்த்தெழுவாள்!
மண்ணகத்தாய்க்குச் சினமூண்டால்;
மாருதத்தைக் கடும்புயலாய் மாற்றிடுவாள்!

மண்ணகத் தாய்க்குச் சினமூண்டால்;
மணிவயிறு வெடிக்கப் பூகம்பமாவாள்!
விண்ணவனும் கூடி இடி இடிப்பான்!—
அம்மம்மா! இக்கொடுமை அவள்மக்கள் தாங்குவமா?
அன்னைமண்மகள் ஆணைக்கடங்கி வாழுவமா?—

தெய்வம் யார்?

தந்தைதாய்ச் சினத்தை நாம் என்றுமே தாங்கிடோம்!
தகையுள மக்களாய்க் கூடியே வாழுவோம்!
விந்தையவள் திருப்பெயர் சத்தியோ! புத்தியோ!
வேணதெல் லாந்தரும் பலதெய்வ பத்தியோ!
முந்தையோர் கண்ட மும்மூர்த்தியோ! முகமது
மொழியும்நம் அல்லாவோ! ஏசுவோ வேறெதோ!
எந்தையும் தாயுமாய் இலங்கியே அருள் தெய்வம்!
இம்மண்ணும் விண்ணுமாம்! என்னுளம் எண்ணுதே!



பூமியே நமது தாய் என்றும்
விண்ணே நமது தந்தை என்றும்
சர்வசமயக்கோட்பாட்டுடன்
விளக்குவது இக்கவிதையின் சாரம்!
—''காளிதாசன்''

"இந்த அரிய கவிதைக்கு எனது ஆசி!"
திருமுருகனருட் செல்வி — எல். வசந்தமணி.



ஜெமினி ஸ்டூடியோஸ் அளிக்கும்

மோட்டார்

சுந்தரம் பிள்ளையைப்பற்றி ...

"இந்திரா சுந்தரம்" இயம்புவது

ஆனந்த விகடன், ஜெமினி ஆகிய கலை நிறு வனங்களின் வாயிலாக அகிலத்தின் நெஞ்சங்களிலே

வாசமாகிவிட்ட கலை மன்னர் **ஸ்ரீ எஸ். எஸ். வாசன்** **அவர்களை** உண்மையில் "**கலை யோகி**" என்றே அழைக்கத்தோன்றுகிறது! -காரணம் சொல்லட்டுமா?

'சர்வர் சுந்தரம்' படத்தைக் கேரளாவிலுள்ள என் உறவினர் குடும்பத்துடன் (நெம்மாரா ஸ்ரீ சௌடாம் பிகா தியேட்டர்) பார்த்துவிட்டு வீடு திரும்பியதும் நடராஜா மோட்டார் சர்வீஸ் கம்பெனி அதிபர் ஸ்ரீ ஏ. இராஜலிங்கம் பிள்ளை அவர்களின் குமாரனும் என் மருமகனுமான சுந்தரம் என்னிடம், "மாமா! சர்வர் சுந்தரம் நாகேஷ்!.... நானே மோட்டார் சுந்தரம்!" என்று மோட்டார் தொழிலிலே முதன்மை வகிக்கும் ஸ்ரீ, டி. வி. சுந்தரமய்யங்கார் ஞாபகத்திலே பெருமை யுடன் கூறிச் சிரித்தான்!

'**கலையோகி**' யான "**ஜெமினி வாசன்**" அவர் களின் செவிகளிலே இந்தச் சுந்தரம் சொன்ன வார்த்தை கேட்டிருக்குமோ என்னமோ! மோட்டார் சுந்தரம் பிள்ளையைச் சிருஷ்டித்து விட்டார்! என் மருமகன் சுந்தரத்தின் சொல் பலித்து விட்டதே என்ற வியப்பும் ஆனந்தமும் கூடி– "**இந்திரா சுந்தரம்**" நடந்ததை அப்படியே விளக்கி விட்டேன்.

நாட்டார் நாளும் நனி விரும்பும்
நல்ல கருத்துப் படங்களிலே;
"**மோட்டார் சுந்தரம் பிள்ளை**" யவர்
முதலாய் வந்தார்! முருகா! கேள்!
காட்டாய்! நின்றன் கருணை வரம்!
கலையானந்த வாசனுக்கே;
கூட்டாய்! "**ஜெமினி**" க்கே கோடிக்
குன்ருய்ப் பொன் தான் குவிந்திடவே!

பாரதசக்திப் பிரசுரம்
காரைக்குடி-1.

—அருட்கவிஞன்
"**அகிலாசுதன்**"

✻



உலகின் போராட்டம்!

உள்ளப்போ ராட்டமே,
உலகின் போராட்டம்!—அதனுல்,
கள்ளமில்லாத கருணையில் நாட்டம்;
கண்டிடில் எங்குமே இன்பக் கொண்டாட்டமே!

❊

உலகெனும் உருளையை
உந்துவோன் ஒருவன்—எனும்
உண்மையை உணரார் (பகையால்)
உழன்று உயிர் விடுகின்ருர்!
பம்பரம் ஆட்டிய பாலனுய் இறைவன்;
பார்த்துப் பார்த்திதைப் பரிகசிக்கின்ருன்!

❊

அணுவைப் பிடித்த விஞ்ஞானி—ஏன்
அகிலத்தை அன்பால் பிடிக்கவில்லை?
கரும்பின்
கணுவைப் பிடித்த ஓர் பாலகனே,
கடித்துச் சுவைத்துக் களிக்கின்ருன்!



ஆளும் ஆண்மை தேர்ந்தான்!

இராகம்-சிந்துபைரவி தாளம்-ஆதி

பல்லவி

சத்திய கீர்த்தியாம் காந்தி சாற்றும் போதனை யேந்தி
பக்தியுடன் கொண்டாடுவோம் - பாரதம் பெற்ற,
(சத்திய)

அநுபல்லவி

கத்தியின்றி ரத்தமின்றி கையில் ராட்டினமே தாங்கி
நித்திய சுயராட்சிய நிலை நமக் கீந்த மகான்!
(சத்திய)

சரணம்

அடிமையுற்ற நம்மினம்
ஆளும் ஆண்மை தேர்ந்தான்!
ஆதிபத்ய வெறிதாம்
அடங்கும் நெறி யாய்ந்தான்!
கொடிய மதவேற்றுமை
குலையும் மறை தந்தான்!
கோடி கோடி யாண்டும் வாழும்
குணக்குன்ருய் உயர்ந்தான்!
(சத்திய



அஞ்சோம் !

சீனத்துப் பழிப்பகைக்குச்
 சிறிதும் அஞ்சோம் !
சிண்டு மூட் டிடுமவர் தம்
 சிறுமைக் கஞ்சோம் !
மானத்தைக் காக்கவுயிர்
 மடிதற் கஞ்சோம் !
மாண்டாலும் சரி; சிகப்பு
 மறத்திற் கஞ்சோம் !
வானத்தை வில்லாயாம்
 வளைப்போ மென்ற
வாய்வீரச் செஞ்சீன
 வீணர்க் கஞ்சோம் !
"மோனத்தீ"யாய் விளங்கும்
 இமயம் சுற்றி
முறைத்துவரும்" சுண்டெலிச்சூ !"
 முடுக்கஞ் சோமே !

கண்ணினைப் போலே காப்போம்!

கண்ணினைப் போலே காப்போம்!
காந்திஜீ செய்த அந்தப்
புண்ணிய வசத்தால் வந்த
பூதல சுதந்திரத்தை;
எண்ணத்துள் எண்ணி யெண்ணி
இன்பமாய் இருப்போம் தம்பி!
கண்ணற்ற கயவர் போலே
கசக்கியே யெறிந்தி டாமல்,
வண்ணமா மலர்போல் நாளும்
வளர்த்துநாம் வையம் வாழ்வோம்!

★

குண்டினை யுண்டு பண்ணிக்
குழந்தைகுட்டி யென் றெண்ணுமல்;
கண்டதோர் இடத்தில் எல்லாம்
கபோதிபோல் வீசி வீசி!
அண்டத்தை அழிக்க வெண்ணும்
அறிவிலார் கண்டு நாணக்,
கண்டதோர் சுதந்தி ரத்தைக்
காப்பமே! கண்ணே பாப்பா!
அண்டத்தில் பாரதத்தாய்
அருட்டிரு நாமம் வாழ!

★

கண்ணன் தான் அருச்சுனர்க்குக்
கருணையால் மொழிந்த கீதை,
வண்ணமே வாழ்வமைப்போம்
வையத்து நாட்டிலெல்லாம்!
"எண்ணத்தாலும் பிறர்க்கு
இடரேதும் இயற்றோம்" என்றே!
மண்ணகத்தார் வியக்க
மதியுடன் வாழ்வோமாயின்,
விண்ணகத் தின்பம் எல்லாம்
விளையும் பார் இங்கே தோழி!



இலட்சக் கணக்கான வாசகர்களின் உளங்கவர்ந்த
உங்கள் அன்புக் கவிஞரான
(இந்திரா சுந்தரம்) "அகிலாசுதன்" எழுதிய

★

உயிரோவியமான **"என் காதலி"**

★

"என்று வருகிறாள்?" என்ற கேள்விக்கு
"வருகிறாள் விரைவில்!" எனக் கூறுகின்றோம்.

★ நடிக்கும் நட்சத்திரங்கள் யார்? யார்?

★ பிடிக்கும் படநிறுவனம்...? விரைவில் வெளிவரும்

—○—

தமிழ்த் திரைவானின் குணச்சித்திர ஜோதி!
திருவிளையாடல் படத்தின் சிருஷ்டிகர்த்தா!!



"இயக்குநர் அரசு"
ஏ. பி. நாகராஜன் அவர்களுக்கு
உலகையே பரிசு என
உவந்தளிப்போம்!

★

(திருவிருத்தம்)

தெருவிளை யாடித் திரியும் சிறுவரும்
சிவபெருமான்
அருள்விளை யாட்டை அகமலர்ந்தே பார்க்கும்
அரும்படமாய்!
திருவிளை யாடலாய் அருள்நாகராஜன் நக்
கீரர்திரு
உருவிளை யாட்டுக்கு உலகையே பரிசென
உவந்தளிப்போம்!

❊

எடுத்திடும் பேசும்பொற் சித்திரம் யாவும்
இன்பமெலாம்
கொடுத்திடும் நவகோடிப் பொன்பெறு மேவையப்
புகழ்பெறுமே!
அடுத்துப் படைக்கும் "சரஸ்வதி சபதம்"
அவ்வண்ணமே!
தொடுத்துக் கொடுக்குமே! நாகராஜன் கலைத்
துரைத்தனமே!

❊

விசயலட்சுமிப்பெயர் விளங்கிடும் படக்கலை
நிறுவனமே!
விசயலட்சுமியருள் பொங்கி விளைந்திடும்
சமுத்திரமே!
விசயலட்சுமிகலைத் தேவியுமை மூவர்
இருப்பிடமே!
விசயலட்சுமியுரு நாகராஜன் விழி
விளங்கிடுமே!

பாரதசக்திப் பிரசுரம்
காரைக்குடி-1.

—அருட்கவிஞன்
"அகிலாசுதன்"

இப்புவிக்கே சிறப்பே!

இராகம்:- மத்யமாவதி தாளம்:- ஆதி

பல்லவி

கிடைத்த சுதந்திரத்தை வுடைத்து விடாதே!
கீர்த்தியுடைய தாக்குவோம்!
(கிடைத்த)

அநுபல்லவி

அடைத்தவிலங்கினம்போல் அன்றடிமைச் சிறையிலே
அடைந்ததுயர் போதாதோ? அதற்குள் நம்முள்
பிணக்கோ
(கிடைத்த)

சரணம்

ஏசுவுடன் இராமனும் அல்லாவும் வேறல்லவே,
இம்மூவரை வணங்கும் இதயம் இரும்பல்லவே,
மாசுதனைக் கற்பிக்கும் மனிதரும் மாறல்லவே,
மனத்தெழும் மதமின்றி மற்றோர் பிழையல்லவே?
(கிடைத்த)

ஒன்றுபட்டாலுண்டு வாழ்வென்பதை மறந்தோம்!
ஒருதாய் 'மண்மகள்' பெற்றாள்; இருவிதமாய்ப்
பிரிந்தோம்!
என்றும் மனிதரெல்லாம் இறைவன் அருள் படைப்பே!
என்னும் 'சித்தாந்தம்' பெறின் இப்புவிக்கே சிறப்பே!
(கிடைத்த)

(இப்பாடல் "நாரதர்" பத்திரிகையில் வெளியானது)

—o—

நவபாரதத்தின்
'கண்ணபெருமான்'
அகில இந்திய காங்
கிரஸ் மகாசபைத்
தலைவர் கனம்
" காமராஜர் "
அவர்கள் காரைக்
குடிக்கு வருகைதந்த
போது தேசபக்திச்
செல்வர் ஸ்ரீ ஏ.கே.ஆர்.
அப்துல் மஜீது
அவர்கள்
A. K. R. ஜவுளி
ஸ்டோர்ஸ் அதிபர்
மலர் மாலை சூட்டி
மகிழும் காட்சி!



காமராஜா! தியாகராஜா!

(இசையமைப்பு: பாடுவோர்களுடையது)

✻

சரித்திரம் கண்டிராப் பெருஞ்சா தனையே
சாதித்த தார் சொல்? நீ தமிழா? — வாழ்வில்
சாதித்த தார் சொல் வாய் தமிழா? — இந்திய,
(சரித்திரம்)

தரித்திர நாரா யணர் தமக்கும் பெருமை
தந்தது யார்? இந்த நாளில் செந்தமிழா? — நலம்
தந்தது யார்? சிந்தனையே செய் தமிழா? — பாரத
(சரித்திரம்)

காந்தியென் ருெருதியாகக் கடல் கொண்டோம்!—பிறர்
கையிருந்த நம் நாட்டைக் கொண் டாண்டோம்!
மா ந்தருள்ளே மாணிக்கமாம் மலை கண்டோம்!—அந்த
மலைவழி வரும் அருவி நீருண்டோம்!
(சரித்திரம்)

தொகையரு

அந் நீர் போல் தமிழகத்தே
அகிலமெல்லாம் போற்று பெரும்
அறிஞர் வாழும்,

நன் நகராம் விருது நகர்
நங்கைசிவ காமி அம்மை
நற்றவத் தால்,

இந்நாட்டில் அருள் சுரக்கும்
இதயமாம் சுனை நீரை
எளியர்க் கீயும்,

பொன்னாட்டின் புலவரெல்லாம்
போற்றிடும் பண் பாட்டுடனே
புதல்வன் வந்தான்!

*

அம்மகனே! தியாகவுரு
வாம் காம ராஜனென
ஆரும் சொல்வார்!

இம்மா நிலத்து மதி
மந்திரியும் ஊழியனும்
இவர்க்கீ டாமோ?

செம்மாந் திருப்பவர் தம்
சிந்தையிலே காமராஜ்
'சினத் தீ' யாவார்!


அம்மா அத் தியாகமலை
அருளும் மொழி அமுதமொழி
ஆகக் கேட்போம்!

பாட்டு

பாரத அமைச்சும் பார்முழுதும் போற்றும்
பண்புள்ள தலைவராம் காமராஜா! — இன்று
வீர ராய்த் தியாக வேந்தராய் — காங்கிரஸ்

விதியை மதியால் வென்று வரும் ராஜா!
பத்தாண்டு ஆட்சியில் தமிழகத்தை — இந்தப்
படிக்காத மேதை தான் ஆண்ட வித்தை!
எத்தாகக் கட்சி பிடிப்பார் மனத்தை — வாட்ட
என்னமோ படுகின் ருர் அவத்தை!
கடலுள்ள மட்டும் எம் காமராஜா! — வாழக்
கடவீர்! என்றேத்துவோம் தியாகராஜா!
உடலுள்ள மட்டும் எம் பூமி ராஜா — உம்
உரை கேட்டே வாழ்வோம் மதியூக ராஜா!

(சரித்திரம்)



வளரும் சுதந்திரம்!

இராகம் - சாமா   தாளம் - ஆதி

பல்லவி

வளரும் சுதந்திரமாம் !- தினமே
வருகைகண் டேமகிழ்வோம், நம்நாடு
(வளரும்)

அநுபல்லவி

குளிர்பூந்தென்றலும் கோலவான்மதியுமாய்க்
குதுகலமேயுளம் குடிபுகும்புதினமே !
(வளரும்)

சரணம்

காந்திய வாழ்வில் நாம்
கண்டதோர் பெருநாள் !
கனவினைக் கனகமாய்க்
காணுமதி சயநாள் !
சோர்ந்த நம் பாரதம்
சோபை பெறும் நாள் !
சொந்த வரசும் புவிச்
சுகமெலாங் கொளும் நாள் !
(வளரும்)

இப்பாடல்: "நாரதர்" பத்திரிகையில் பிரசுரமானது.

வாங்க! வாங்க!
வீரத்திருமறவரே
நீங்க!



" திருவிளையாடல் " படத்தில் வரும் ஏலே ஏலோ என்ற பாடல் இசையைத் தழுவியது.

ஆண்கள்: வேலே! வேலே! செந்தில் வேலே!

பெண்கள்: வேலே! வேலே! பழநிவேலே!

பெண்: ஆ! வேலே! வேலே!...ஆறுமுகவேலே!
வாங்க! வாங்க! வீரத்திரு மறவரே நீங்க!
— பழி
வாங்க! சீனத் தானே நோக்கி வளைச்சிடுவீங்க!
போங்க! போங்க! சூ-என்-லாயைப் புடுச்சிடுவீங்க!
— விழி
பிதுங்க அவன் ஆணவத்தைப் பொசுக்கிடுவீங்க!
....ஆ...ஆ...

ஆண்கள்: வேலே! வேலே! செந்தில் வேலே!

பெண்:
நமது நாட்டை நாளுங் காக்க விரதம் பூணுங்க!
— நச்சு
நாகப்பாம்பாம்! சீனன் கூட்டை நசுக்கிடுவீங்க!
"எமது பாரதத்தின் கற்பை எவன் பறிப்பாங்க!
— மீறி
எண்ணி வந்தால் பல்லுடையும்!" எனக்குதிப்பீங்க!
(வாங்க! வாங்க)

இமயத்திலே கொடிகட்டின இருகரத்தாலே,
— 'சூவாம்'
இரும்பு நெஞ்சனுக்குப்பாடம் புகட்டுவதாலே!
நமது தரும வீரத்துக்கே வரும் சயத்தாலே!
— தொடை
நடுநடுங்க! ஓடுவானே! பூனையைப் போலே!
வாங்க! வாங்க!

ஆண்கள்: வேலே! வேலே! செந்தில் வேலே!

பெண்கள்: வேலே! வேலே! பழநிவடி வேலே!

மானங் காக்க புறப்படடா!

"ஒளியன்"
மத்திய மின் - ரசாயன ஆய்வுக் கூடம்
காரைக்குடி-3

*

புறப்படு மகனே! புறப்படடா
போர்முனை நோக்கிப் புறப்படடா! (புறப்படு)

அறவலியாலே அன்றொரு நாள்
அடிமைத் தளையை அறுத்தெறிந்தோம்
மறவலி என்னும் மமதையின்முன்
மானங் காக்கப் புறப்படடா! (புறப்படு)

திறமை தன்னைப் பயன்படுத்து!
தீமை தன்னைப் பயப்படுத்து!
உறவு தன்னை முறிப்பவரை
உலகை விட்டே முறித்துவிடு! (புறப்படு)

சீனப் படையை அழித்துவிடு!
ஊனம் செய்து அனுப்பிவிடு
கானல் நீராய் அவர் கனவை
கற்பனையோடு சேர்த்துவிடு! (புறப்படு)

கூடியிருந்தே கொள்ளி வைத்தான்
மூடி வைத்தே படை தொடுத்தான்
வாடித் திரும்ப வழி செய்வோம்
வாகை சூடிப் புறங் கொள்வோம்! (புறப்படு)

ஜெய் ஹிந்த்!

நானிலம் புகழும் ஒரு நன்முத்து!

அருணகிரிப் பெருமானின் திருப்புகழ் அமுதினைப் பருகிய அகிலத்தின் மக்கள் "ஏறுமயில் ஏறி விளையாடும் அந்த ஆறுமுகமான பொருள் வேண்டும்!" தமக்கு என்று அகங்குளிரப் பாடிக் களிப்பதுண்டு.

திருச்செந்தூர் ஆறுமுகப் பெருமானின் அருட் கடலிலே விளைந்து வருகின்ற அருள் முத்தினை — அம் முத்தின் அருமை பெருமையினை அறியாதார் யார்?

அதுபோன்று: காரைக்குடியாம் கவின் பெறு நகரிலே, அருட் செங்கோல் தாங்கிய அண்ணலாம் தங்கபஸ்பம் புகையிலை நிறுவனத்தின் ஆதி பிதாவாகிய அமரர் – தெய்வத்திருவினர் என். ஆறுமுகம் பிள்ளை அவர்களின் கருணைக் கடலிலே பிறந்து விளைந்தது:

"நானிலம் புகழும் ஒரு நன் முத்து! —இது
பாரதத்தின் மகத்துவமான பெருஞ்சொத்து!"

இந்த முத்தின் திருவொளியிலே நாடு புகழும், தொழில் வளர்கிறது! தொழிலாளர்கள் வளர்கிறார்கள்! வர்த்தகம் வளர்கிறது! நாடும் வளர்கிறது! தெய்வத் திருவருள் வளர்கிறது! தேசீயப் பணிகள் வளர்கிறது! கல்வி வளர்கிறது! கலை வளர்கிறது! கவிதை வளர் கிறது! கலைஞர்கள் வளர்கிறார்கள்! முத்தமிழும் வளர் கிறது! மொத்தத்தில் நலமெலாம் நாளும் வளர்ந்து கொண்டே வருகிறது!

வளரும் தங்கபஸ்பம் நிறுவனத்தின் தந்தையாக விளங்கி வரும் சுந்தரமான — **தொழில் மன்னர் ஸ்ரீ. ஏ. எம். முத்து அவர்கள்** இமயத்தின் **வளர்ச்சியினை யொத்து** வாழுமாறு வாழ்த்தும்.

— அருட்கவிஞன் **"அகிலாசுதன்"**

பாரத சுபிட்சம்!

இராகம்:- கல்யாணி தாளம்:- ஆதி

பல்லவி

சுதந்திரக் குடியரசு கொள்ளுந்திருநாள்—பாரத
சுபிட்சம் பாரெங்குமே பொங்கும் பெருநாள்
(சுதந்திர)

அநுபல்லவி

இதந்தரும் இந்திய விடுதலை யீந்த நாள்
இல்லமெலாம் மூவர்ணக் கொடியுயரும் பொன்னுள்!
(சுதந்திர)

சரணம்

ஆண்டாண்டு தோறுமே அமைதி வழங்கும் நாள்
ஆண்டவுரிமை மீண்டும் அமைந்த மங்கலநாள்
வேண்டாதவராட்சியை வீழ்த்தும் சக்தியொளிர் நாள்
வேந்தருடனும் சமமாய் வீற்றிருக்கும் திருநாள்!
(சுதந்திர)

ஆணவம் குன்றி அசோகன் அன்பு பரவும் நாள்
ஆளடிமை யிருள்போய் ஆதவனும் எழும் நாள்
காணக் காணப் பேரின்பக் கடல் முழங்கும் நன்னுள்
காந்தி மகாத்மா வளர் கருணை நாம் நவில் நாள்!
(சுதந்திர)



பரிசு பெற்ற பாடல்

இந்த நாட்டின் இமயம்!

ஒரே ஒரு ஊரிலே என்ற "படிக்காத மேதை"
படப் பாட்டிசை.

*

ஒரே ஒரு நாட்டிலே ஒரே ஒரு மாணிக்கம்!
ஒரே ஒரு மாணிக்கப்பேர் இந்தியாவில் ஜவஹராம்!
ஒரே ஒரு ஜவஹர் நம்மை ஆண்ட மந்திரியாம்!
— அவர்க்கு
ஒருவருமே நிகரிலாத இராஜ தந்திரியாம்!
(ஒரே ஒரு)

'நேரு' வென்பார் பாருளோர்கள் நேர்மையே
நிறைந்தார் — அவர்
நேர்மை கடமை நடுநிலைமை கொண்டரசாண்டார்!
ஊரும் உலகும் போற்றும் உண்மை ஒளிமுகம்
கொண்டார்!

— தாம்

உரைப்பதைப்போல் செயலில் தீரர் ஒருவராய்த்
திகழ்ந்தார்!
(ஒரே ஒரு)

குழந்தை யென்ருல் அவர்க்கு ஒரே கொண்டாட்ட
மாயிருக்கும் — ஏழைக்
குடிக் குழந்தை யாயினும் வாய் முத்தமே
கொடுக்கும்!
இழந்தமதி யுடையருக்கும் திடமனங்
கொடுக்கும்! — நெஞ்சு
இரக்கத்திலே புத்தர், காந்தி
இவரோ என்றிருக்கும்!
(ஒரே ஒரு)

"சொந்தம்" என்ருர் இந்தியாவின் மக்களை
— யெல்லாம் சிறு
சோம்பலுக்கும் இடங்கொடாது நாளும் உழைத்தார்!
இந்த நாட்டின் இமயம் போலே
இவர் பெயர் வாழ! — நாம்
இறைவன் பாதம் வணங்கிடுவோம்
உலகெலாம் சூழ!
(ஒரே ஒரு)

இப்பாடல் இராதாபுரம் பஞ்சாயத்து யூனியன் சார்பில் நிகழ்ந்த 'குழந்தைகள் தின விழாவிலே மேற்படி யூனியன் பள்ளி மாணவியரான

செல்வி எஸ். வேலாம்பாள், செல்வி எல். ஆதிலட்சுமி
இருவரும் பாடி முதற்பரிசு பெற்றது.

உன் பாத உலகம் வாழ!



ஸ்ரீ கோவி. இராஜ ஸ்ரீநிவாசன்
கனரா பாங்கு, அம்பாசமுத்திரம்.

அருள்மலையுள் ளிருந்துவரும்
அமுத மன்ன,
அருவிதனைச் சொரின்ற
ஆதி லக்ஷ்மி!
மருள் மனதை மாற்றும் அரும்
மருந்தே ஞான
மணிவிளக்கே! மனைவிளக்க
மாகுந் தெய்வத்
திருமகளே! விண்ணாகித்
திகழும் நீலத்
திருமேனி மாலவனைத்
தழுவும் திங்கள்!
உருவினளே! உன்பாத
உலகம் வாழ!
உடனிரங்காய்! மலர்மணமாய்
உலவும் அம்மா!